<u>முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், திருப்பூர்</u>

<u>பசுமைப் போர்வை பள்ளிகள்</u>



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் திரு.சி. சமயமூர்த்தி அவர்கள் அவிநாசி அரசு மேல்நிலைப்பள்ளியில் '**பசுமைப் போர்வை**' பள்ளிகளில் மரம் நடும் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.



பசுமைப்போர்வை பள்ளிகளில் மரம் நடும் விழா நிகழ்ச்சியை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவிநாசி அரசு மேல்நிலைப்பள்ளியில் துவக்கி வைத்தார்.



பசுமைப்போர்வை மரம் நடுதல் – முதன்மைக் கல்வி அலுவலர் மரம் நடுதல். அரசு மேல்நிலைப்பள்ளி, அவிநாசி,

உலக வெப்பமயமாதலைத் தடுத்தல் வேண்டி பசுமை போர்வை பள்ளிகள் ஏற்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில்

1. அவிநாசி அரசு மேல்நிலைப்பள்ளி

2. ஊத்துக்குளி (ஆண்கள்) அரசு மேல்நிலைப்பள்ளி

3. அனுப்பர்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி

4. குடிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி

ஆகிய பள்ளிகள் பசுமை போர்வை பள்ளிகளாக தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இந்த பள்ளிகளில் தலா ரூ.25,000/– மதிப்பில் மரக்கன்று நட்டு பராமரிக்க மாவட்ட ஆட்சியர் திரு.சி.சமயமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

பசுமைப் போர்வை பள்ளியாக அறிவிக்கப்பட்ட அவிநாசி மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்று நடும் விழா பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடந்தது. முன்னதாக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் 24.11.2010 அன்று காலை 11.00 மணியளவில் பள்ளி வளாகத்தில் பசுமைப் போர்வை திட்டத்தை மரக்கன்று நட்டு துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முதன்மைக் கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன் அவர்களும், பள்ளித் தலைமையாசிரியர் திரு.ப. சரவணபவன் அவர்களும் மரக்கன்றுகள் நட்டனர். பள்ளிகளில் செயல்படும் சுற்றுச்சூழல் மன்றம், தேசிய பசுமைப்படை, நாட்டுநலப்பணித் திட்டம், சாரணர் இயக்கம் ஆகிய அமைப்புகளின் மாணவ உறுப்பினர்கள் 350 பேர் தலா ஒரு மரக்கன்று நட்டு மொத்தம் 353 மரக்கன்றுகள் நடப்பட்டது.

நடப்பட்ட மரக்கன்றுகளை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்பு மூங்கில் வலைக்கூண்டுடன் வைத்து மரக்கன்றுகள் நடப்பட்டன. மற்ற மூன்று அரசுப் பள்ளிகளிலும் அன்றைய தினமே மரக்கன்றுகள் நடப்பட்டது. ஊத்துக்குளி (ஆண்கள்) அரசு மேல்நிலைப்பள்ளி – 200 மரக்கன்றுகளும், அனுப்பர்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி – 250 மரக்கன்றுகளும்,

குடிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி – 300 மரக்கன்றுகள் நடப்பட்டன. இத்திட்டத்தில் நடப்பட்ட மரக்கன்றுகளை தொடர்ந்து தண்ணீர் விட்டு பராமரிக்க சுற்றுச்சூழல் மன்றம், தேசிய பசுமைப்படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் சாரணர் திட்ட மாணவர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருப்பூர்.